1979 ஏப்ரல் 21]

இராயபுரம் தொகுதியில் கட்டப் பட்டுள்ள புதிய குடியிருப்புகள்.

* வினா எண். 761— திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னைஇராயபுரம் தொகுதி வண்ணாரப்பேட்டை, 10 - ஆவது வட்டம் கிழக்கு கல்லறைச் சாலையில், குடிசை மாற்று வாரியத்தில் இப்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள 460 புதிய குடியிருப்புகளிலும் பாதுகாப்பற்ற நிலையும் மின் வசதியில்லாத மற்றும் சுகாதாரமற்ற நிலையும் இருப்பதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நீக்குவதற்கு அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) அவ்வாறான நிலமையில்லை. குடியிருப்புகளில் தனித்தனி குளியல் அறை மற்றும் கழிப்பிட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு ஏழு தெரு மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன. வீடுகளுக்கு மின் விளக்கு வசதிகள் அதில் குடியிருப்பவர்களே செய்து கொள்ள வேண்டும். அதற்கு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தடையின்மை சான்றிதழ் (No Objection Certificate) அளிக்கின்றது. தற்போதைக்கு மேல் நிலைத் தொட்டிகளில் நீர் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

Government Papyee Hospital at VALAYAPATT

* Q. No. 762. Thiru N. SUNDARARAJ : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) Whether there is any proposal to start an X-ray Unit at Government Papeyee Hospital at Valayapatti in Tirumayam taluk in Pudukkottai district; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) & (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுக்கா வலையப்பட்டி அரசினர் பாப்பாயி மருத்துவ மனையில் எக்ஸ்ரே கருவி அமைப்பதற்கு 1979-80 நிதியாண்டில் ரூ. 1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் போதாது. இன்னும் அதிகமான சலுகைகள் செய்து தரவேண்டும். உப